இளைஞர் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் வேலையை த.வெ.க.வும் - காங்கிரசும் செய்கிறது!

எஸ்.ஐ.ஆரை எதிர்த்தது யார், ஒளிந்தது யார்?

முன்னாள் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

சென்னை, அக். 15- **ஞானேஷ் குமாருக்கு வக்காலத்து, எஸ்.ஐ.ஆருக்கு எதிர்ப்பா? அம்பலமாகும் த.வெ.க. நாடகம் என்றும் கூர்மையாகும் இளைஞர் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் வேலையைத்தான் த.வெ.க.வும் காங்கிரஸும் செய்து கொண்டிருக்கின்றன. எஸ்.ஐ.ஆரை எதிர்த்தது யார், ஒளிந்தது யார்? என்றும் முன்னாள் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தனது அறிக்கையில் கேள்வி எழுப்பியுள்ளார்.**

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் SIR-ஆல் மக்களின் வாக்குரிமை பறிபோகாமல் இருக்க தி.மு.க.வினர் பாடுபட்டதை பாராட்டும் விதமாக வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டத்தில் எங்கள் தலைவர் பேசியதை ஒட்டி, வெட்டி போட்டு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக்கம் தாக்கூர் தி.மு.க.விடம் பதிலடியாக வாங்கி கட்டிக் கொண்டார்.

ஒத்தடம் கொடுக்கும் ஆதவ் அர்ஜுனா!

அந்த 'கால் அமுக்கி' மாணிக்கம் தாகூருக்கு விழுந்த வசவுகளுக்கு ஒத்தடம் கொடுக்க ஓடி வந்திருக்கிறார் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா. SIR விவகாரத்தில் தி.மு.க. எதையும் செய்யவில்லை, பா.ஜ.க.வுக்கு ஆதரவாக செயல்பட்டது என்றெல்லாம் கதைகளை கட்ட விழ்த்திருக்கிறார்.

முன் பின் பேப்பர் படித்திருந்தால் கூட ஆதவ் அர்ஜுனாவுக்கு இதெல்லாம் தெரியும்! அப்படி தெரியவில்லை என்றால் எங்கள் கூட்டணியில் வெற்றி பெற்று உங்கள் கூட்டணியில் சேர்ந்திருக்கும் கல்லா பெட்டி கூட்டணியினரை கேட்டு தெரிந்து கொள்ளட்டும்.

இந்தியத் தேர்தல் ஆணையம் கொண்டு வந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த முறைக்கு (Special Intensive Revision - SIR) எதிராக தி.மு.க. மேற்கொண்ட தொடர் முயற்சிகள், சட்டப் போராட்டங்களில் பங்கேற்றவர்கள் மற்றும் அரசியல் நடவடிக்கைகள் அனைத்திலும் சாட்சிகளாக இருந்தவர்கள் இன்றைக்கு த.வெ.க. கூட்டணியில் இருக்கிற காங்கிரஸ், விசிக, முஸ்லிம் லீக் தலைவர்கள்தான். SIR-ஐ தி.மு.க. எதிர்க்கவில்லை என்றால், அவர்களும் எதிர்க்கவில்லை என்றுதானே அர்த்தம்! இப்போது கள்ள மவுனம் காப்பவர்கள் யார்? என்பது நாடறியும்.

தி.மு.க. வின் நிலைப்பாடு!

● 2025 அக்டோபரில் தேர்தல் ஆணையத்தின் SIR நடவடிக்கைக்கு தி.மு.க.வும் அதன் கூட்டணிக் கட்சிகளும் வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் இவ்வளவு பெரிய பணியைச் செய்வது மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். பீகார் மாநிலத்தைப் போல லட்சக்கணக்கான



உண்மையான வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்படலாம் என்று குற்றம் சாட்டி கூட்டறிக்கை வெளியிட்டது.

● SIR-க்கு 2025 நவம்பர் 2 அன்று தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. 46 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அதில் பங்கேற்றனர்.

● அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் SIR நடைமுறைக்கு எதிராக ஒருமனதாகக் கண்டனம் தெரிவிக்கப்பட்டு, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடிவு எடுக்கப்பட்டது.

● பீகாரில் சிறுபான்மையினர் மற்றும் பா.ஜ.க. அல்லாத 65 லட்சம் வாக்குகள் திட்டமிட்டு நீக்கப்பட்டது போல, தமிழகத்திலும் செய்யத் திட்டமிடும் தேர்தல் ஆணையத்திற்கு அனைத்துக் கட்சி கூட்டத்தில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

● SIR பணியை உடனடியாகத் திரும்பப் பெற்று 2026 சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு போதிய கால அவகாசம் வழங்கி வெளிப்படைத்தன்மையுடன் மட்டுமே திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

● பருவமழைக் காலப் பாதிப்பால் மக்கள் படிவங்களை சமர்ப்பிப்பதில் பெரும் சிரமம் ஏற்படும் என்பதால் அந்த கால கட்டத்தில் பணியைச் செய்யக் கூடாது என தி.மு.க. அறிவுறுத்தியது.

● 2025 நவம்பரில் SIR-க்கு இடைக்காலத் தடை விதிக்கக் கோரி, உச்ச நீதிமன்றத்தில் தி.மு.க. சார்பில் வழக்கு தொடரப்பட்டது.

● SIR நடைமுறைக்கு எதிராக தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 2025 நவம்பர் 11 அன்று தி.மு.க. கூட்டணி கட்சிகள் சார்பில் கண்டனப் போராட்டம் நடத்தப்பட்டது.

● 2025 டிசம்பரில் SIR நடைமுறைக்கு எதிரான தங்களின் நிலைப்பாட்டைத் தொடர்ந்து தி.மு.க., விடுபட்ட மற்றும் முறையற்ற முறையில் நீக்கப்பட்ட வாக்காளர்களை மீண்டும் பட்டியலில் சேர்க்கும் பணிகளைத் தீவிரப்படுத்த தங்களின் பூத் ஏஜென்ட்டுகளுக்கு அறிவுறுத்தியது.

● நாடாளுமன்றத்தில் SIR நடைமுறைக்கு எதிராகத் தங்களின் கடுமையான எதிர்ப்புக் குரலை தி.மு.க. எம்.பி-கள் பதிவு செய்தனர். பீகாரில் SIR-ஆல் 65 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டதை நாடாளுமன்ற விவாதங்களில் தி.மு.க. எம்பிக்கள் ஆதாரமாக முன்வைத்துக் கடுமையான கேள்விகளை எழுப்பினர்.

● SIR-ஐ கண்டித்து, நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. எம்பிக்கள் மற்றும் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் இணைந்து தொடர் கவன ஈர்ப்புப் போராட்டங்களை நடத்தினர்.

த.வெ.க. என்னதான் செய்தது?

இப்படி SIR விவகாரத்தில் தி.மு.க.வின் நிலைப்பாடு வெட்ட வெளிச்சமாக இருந்த போது தி.மு.க. எதையும் செய்யவில்லை என கதை கட்டுகிறார்கள். SIR விவகாரத்தில் த.வெ.க. என்ன செய்தது?

SIR-க்கு எதிராக தி.மு.க. கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் த.வெ.க. பங்கேற்கவில்லை. SIR நடவடிக்கையை ஆதரித்த அதி.மு.க. பங்கேற்காமல் போனதில் ஆச்சரியமில்லை. ஆனால், SIR-ஐ எதிர்ப்பதாக சொன்ன த.வெ.க. பங்கேற்காமல் பதுங்கி கொண்ட ஓநாய்கள் எல்லாம், இன்றைக்கு SIR-ஐ எதிர்ப்பதாக ஓல மிடுகின்றன.

SIR நடைமுறைக்கு எதிரான தி.மு.க.வின் சட்ட மற்றும் அரசியல் ரீதியிலான களப் போராட்டங்களை பட்டியல் போட்டிருக்கிறோம். இதே போல த.வெ.க.-வால் ஒரு பட்டியலை காட்ட முடியுமா? 2025 நவம்பர் 16 போராட்டமும் உச்ச நீதிமன்றமனுவும் தவிர த.வெ.க. என்ன செய்தது?

வக்காலத்து வாங்கியவர்கள்!

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கடந்த மாதம் சென்னையில் போராட்டம் நடத்திய போது த.வெ.க. ஏன் பங்கேற்கவில்லை? அதுபற்றி கேட்ட போது அமைச்சர் ராஜ் மோகன், "ஞானேஷ் குமாரை நீக்கும் கோரிக்கையைத் திசை திருப்பும் தந்திரம். ஆழமான பிரச்சினையிலிருந்து கவனத்தைத் திருப்ப அவர் பலிகடா ஆக்கப்படுகிறார்" என்று ஞானேஷ்குமாருக்கு ஆதரவாக பம்மினாரே எதற்காக? டெல்லி எஜமான் கோபித்துக் கொள்வார் என திசைத் திருப்பியவர்கள் எல்லாம், இன்று SIR-ஐ எதிர்க்க கிளம்பிவிட்டார்கள். ஞானேஷ்குமாருக்கு வக்காலத்து வாங்கியவர்கள் எல்லாம் SIR-ஐ எதிர்க்கிறோம் என கபட நாடகம் ஆடுகிறார்கள்.

ஞானேஷ்குமாரைப் பதவி விலகக் கோரி, அவரைக் கைது செய்து வழக்குத் தொடர வேண்டும் என்று தமிழ்நாட்டில் போராட்டம் நடத்திய போது அவர்களை எல்லாம் இரும்புகரம் கொண்டு ஒடுக்கிய ஓடுகாலிகள், SIR-ஐ பற்றி பேசுவதற்கும் அதில் தி.மு.க.வை குற்றம் சாட்டுவதற்கும் என்ன அருகதை இருக்கிறது? டெல்லியில் கரப்பான் பூச்சி கட்சியினர் கைது செய்யப்பட்ட போது எங்கள் தலைவர் கடுமையாக எதிர்த்தார். தமிழ்நாட்டில் போராடியவர்கள் கைது செய்யப்பட்ட போது தி.மு.க. நிர்வாகிகள் நேரில் சந்தித்து ஆதரவு கரம் நீட்டினார்கள். முதலமைச்சர் ராகுல்காந்தியுடன் காபி அருந்திக் கொண்டிருந்தார்.

கூர்மையாகிக் கொண்டிருக்கும் இளைஞர் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் வேலையைத்தான் த.வெ.க.வும் காங்கிரஸும் செய்து கொண்டிருக்கின்றன.

த.வெ.க. நாடகத்திற்கு முட்டுக் கொடுக்கும் காங்கிரஸ்!

பா.ஜ.க.வும் அவர்களுக்கு வேலை செய்யும் தேர்தல் ஆணையத்திற்கும் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கும் கூலிப்பணி செய்கிறவர்கள்தான் விஜய் அமைச்சரவையில் இன்று அமரவைக்கப்பட்டிருக்கிறார்கள்.

SIR-க்கு எதிராக காங்கிரஸும் த.வெ.க.வும் ஒன்றுபட்டிருக்கிறதா? ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள த.வெ.க. எச்சரிக்கையாக SIR-ஐ எதிர்ப்பதாக சொல்லிக் கொண்டே நாடகம் ஆடுகிறது. அது நாடகம் என தெரிந்தும் காங்கிரஸ் முட்டு கொடுக்கிறது.

"BLO-க்கள் மாநில ஊழியர்கள் என்பதால் தி.மு.க. கட்டுப்பாட்டில் இருந்தது" என்கிறார் ஆதவ் அர்ஜுனா. எஸ்.ஐ.ஆர் தேர்தல் ஆணையத்தின் நடைமுறை. BLO-க்கள் தேர்தல் ஆணையத்தின் கீழ் செயல்படுபவர்கள். இந்த அடிப்படை அறிவு கூட இல்லாமலா அமைச்சர் ஆதவ் அர்ஜுனா இருப்பார்?

எஸ்.ஐ.ஆரால் ஆட்சி மாற்றம்!

தி.மு.க. எஸ்.ஐ.ஆரைக் கட்டுப்படுத்தி வெற்றிக்காகப் பயன்படுத்தியது என்றால், தி.மு.க. ஆட்சியை இழந்தது ஏன்? த.வெ.க. ஆட்சியை பிடித்து எப்படி? காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்க்கே சொன்னது படி எஸ்.ஐ.ஆரால் ஆட்சி மாற்றம் நடந்துவிட்டதா?

தி.மு.க.வும் பா.ஜ.க.வும் ரகசியக் கூட்டணி துருப்பிடித்த ஆயுதத்தை தூக்கி கொண்டு வருகிறார் ஆதவ் அர்ஜுனா. பா.ஜ.க.வும் தி.மு.க.வும் தமிழகத்தின் முக்கிய எதிரிகள் என்பது 6-ஆம் வகுப்பு மாணவனுக்கு கூட தெரியுமே! மாண்புமிகு ஆதவ் அர்ஜுனாவுக்கு தெரிய வில்லை என்றால் மூளையில் என்ன பிரச்னை? சரியான மருத்துவரை பாருங்கள் அமைச்சரே!


ஆதாரத்தை வெளியிடுங்கள்!

SIR படிவம் நிரப்ப தி.மு.க. உதவியதை ஜனநாயகப் படுகொலை என்றும் கட்சி முகவர்கள் (BLA) நியமிப்பது எல்லாக் கட்சிகளுக்கும் உள்ள சட்டபூர்வ வாய்ப்பு என்பதையும் அறியாத அளவுக்கு மக்கு சாம்பிராணியை அமைச்சரவையில் வைத்திருக்கிறார்களே! வாக்காளர்களுக்கு உதவுவது எல்லாக் கட்சிகளுக்கும் உள்ள சட்டபூர்வ உரிமை. த.வெ.க.வும் முகவர்களை நியமிக்கலாமே! இதில் எப்படி தவறு நடக்கும்!

வாக்காளர்களைக் காக்க தி.மு.க. உழைத்தது என்றும், நீக்கத்துக்கு உடந்தை என்றும் முரணாக பேசுகிறது ஆதவ் அர்ஜுனாவின் அறிக்கை. ஆட்சியில்தானே இருக்கிறீர்கள். அந்த SIR-ல் ஆதாரம் இருந்தால் இப்போதே வெளியிடுங்கள்.

எஸ்.ஐ.ஆரை நடத்தியது தேர்தல் ஆணையம். SIR-ஐ தி.மு.க. கட்டுப்படுத்தியிருந்தால் ஆட்சியை ஏன் இழந்தோம்? 'எஸ்.ஐ.ஆர் டிராமா'-வை நடத்தி விட்டு அதற்கு தி.மு.க.வின் லேபிளை ஒட்ட பார்க்கும் ஓட்டை வாய்களை மக்கள் அடைப்பார்கள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.



கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மேற்கொள்ள வேண்டிய மறுசீரமைப்பு பணிகளை வரைமுறை படுத்தும் பணியின் ஒரு பகுதியாக வேலூர் தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் ஆலோசனைப்படி நேற்று (14.10.2026) மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர,பகுதி மற்றும் பேரூர் ஆகிய கழக அமைப்புகளின் செயலாளர்களுடன் தலைமைக்கழக பிரதிநிதிகளான கழக துணை அமைப்புச்செயலாளர் ப.தாயகம்கவி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இ.கருணாநிதி ஆகியோர் கலந்தாய்வு மேற்கொண்டனர். உடன் வேலூர் மாநகர செயலாளர், ப.கார்த்திகேயன் மற்றும் ஒன்றிய,நகர,பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட, மாநகர அணிகளின் நிர்வாகிகள் உள்ளனர்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(13.10.2026)

1. புதுக்கோட்டை அருகே கரம்பக்குடியில் சேர்ந்து வாழ வலியுறுத்தியதால் இரண்டாவது மனைவியை கொன்று தோட்டத்தில் புதைத்த போலீஸ்காரர் ....



2. மதுரை ஒத்தக்கடை அருகே மதுபோதையில் புகைப்பிடித்த தகராறில் இரும்பு கம்பியால் டிரைவரை அடித்துக் கொன்ற கிளீனர் ...

3. சென்னை, மயிலாப்பூர் பறக்கும் ரயில் நிலையத்தில் பூட்டிய அறையில் அழுகிய நிலையில் பெண் சடலம்.. ரயில் நிலைய நடைமேடையில் மகளை காத்திருக்க சொல்லிவிட்டு, கழிவறைக்குச் சென்றவருக்கு நேர்ந்த கொடூரம் ....



4. சென்னை அம்பத்தூர் அருகே 12 வயது சிறுமிக்குப் பாலியல் தொல்லைக் கொடுத்ததால் ஆத்திரம் . தொல்லை கொடுத்த ஆசாமியை கத்தியால் குத்தி கொன்ற வாலிபர்....

5. கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் அருகே திருமண வரவேற்பில் புதுமணப் பெண்ணை தாக்கிய ராணுவ வீரர் ...

6. கன்னியாகுமரி மாவட்டம் பறக்கை அருகே திருமணத்தை மீறிய உறவுக்கு இடையூறாக இருந்த தனது குழந்தைகளை கள்ளக்காதலனுடன் சேர்ந்து கம்பால் அடித்து உதைத்தும், சிகரெட்டால் சூடு வைத்தும் சித்திரவதை செய்தும் கொடூர செயலில் ஈடுபட்ட தாய் ....



7. சென்னை பழைய வண்ணாரப்பேட்டையில் முன்விரோதம் காரணமாக வாலிபரை மிரட்டி காரை பறித்துக் கொண்டு கொல்ல முயன்ற ரவுடி...

8. விழுப்புரத்தில் அடுத்தடுத்து பர்னிச்சர் கடை மற்றும் கார்மெண்ட்ஸ் உள்ளிட்ட கடைகளில் கதவின் பூட்டினை உடைத்து மர்மநபர்கள் கடையிலிருந்த 7 லட்சத்து 11 ஆயிரம் ரொக்க பணம் மற்றும் சி.சி.டி.வி. காட்சிகள் பதிவான ஹார்ட் டிஸ்க்குகள் திருட்டு, பொதுமக்கள் அச்சம்....

9. திருச்சி மாவட்டம் துறையூர் பாலக்கரை பகுதியில் உள்ள பேங்க் ஆப் பரோடா ஏ.டி.எம். மையத்தில் கொள்ளை முயற்சி 19 லட்சம் பணம் தப்பியது...

10. சென்னை திருவான்மியூரில் டீக்கடை ஊழியரை வழி மறித்து கத்தி முனையில் பணம் கொள்ளை ...



11. சென்னை பெரம்பூர் முதலமைச்சர் தொகுதியில் மாநகராட்சி அதிகாரிகள் அலட்சியம் காரணமாக விஷ வாயுத்தாக்கி இருவர் பலி, உடல்களை வாங்க மறுத்து உறவினர்கள் போராட்டம் ....

12. சென்னை, தியாகராயர் நகர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் டாக்டர்கள் பணியில் இல்லாததால் நோயாளிகள் அதிர்ச்சி, சிகிச்சை பெற முடியாமல் திரும்பிய அவலம்...

13. தமிழ்நாட்டில் சென்னை மற்றும் பல்வேறு பகுதிகளில் தொடரும் மின்வெட்டு, பொதுமக்கள் அவதி, தொடரும் சாலை மறியல்கள்...

14. சென்னை கொரட்டூர் மற்றும் புழல், புளியந்தோப்பில் கஞ்சா விற்பனை படுஜோர். 7 பேர் சிக்கினர் .

இராணிப்பேட்டை மாவட்டக் கழகம் சார்பில்

கழக அமைப்பு மறு சீராய்வுக் கூட்டம்!


மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி அறிக்கை!

இராணிப்பேட்டை, அக். 15 - இராணிப்பேட்டை மாவட்டம் நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் கவனத்திற்கு தலைமைக் கழக அறிவுறுத்தலின் படி கழக அமைப்பு மறு சீராய்வுக் கூட்டம் 17.10.2026 - சனிக்கிழமை அன்று கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது.

இது குறித்து மாவட்ட கழக செயலாளர் ஆர். காந்தி அறிக்கை வருமாறு:

அரக்கோணம் சட்ட மன்ற தொகுதி காலை 09.30 மணி OTP மஹால், நாகலம்மன் நகர், அரக்கோணம் அரக்கோணம் நகரம் , அரக்கோணம் மத்திய ஒன்றியம், அரக்கோணம் கிழக்கு ஒன்றியம் , அரக்கோணம் தெற்கு ஒன்றியம், நெமிலி கிழக்கு ஒன்றியம் , நெமிலி மத்திய ஒன்றியம்,

சோளிங்கர் சட்டமன்றத் தொகுதி நெமிலி



தெற்கு ஒன்றிய அலுவலகம், ரெட்டிவலம், காலை 11.00 மணி நெமிலி தெற்கு ஒன்றியம், நெமிலி வடக்கு ஒன்றியம்,

இராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதி மாவட்ட கழக அலுவலகம், பாரதி நகர், சிப்காட் பிற்பகல் 3.00மணி வாலாஜா கிழக்கு ஒன்றியம், வாலாஜா மத்திய ஒன்றியம், வாலாஜா தெற்கு ஒன்றியம், ஆற்காடு மேற்கு ஒன்றியம்,

ஆற்காடு சட்டமன்ற தொகுதி நகர கழக அலுவலகம் ஆற்காடு மாலை 04.00 மணி ஆற்காடு கிழக்கு ஒன்றியம் , கணியம்பாடி ஒன்றியம், ஆற்காடு நகரம்,

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் தலைமைக் கழக பிரதிநிதிகள் T. செங்குட்டுவன் கழக அமைப்பு சாரா ஓட்டுனர் அணி மாநில செயலாளர், திரு. வழக்கறிஞர் சரவணன் தலைமை கழக ஊடக பிரிவு இணை செயலாளர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

ஆகவே, இக்கூட்டத்திற்கு நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகி கள் அந்தந்த பகுதியில் உள்ள மாவட்ட நிர்வாகிகள் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் அணியின் நிர்வாகிகள் கலந்து கொண்டு தக்க ஆலோசனை வழங்கிட கேட்டுக்கொள்கிறேன் .

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.